**நோர்வூட் பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஏப்ரல் 01 திகதி தொடக்கம் திசம்பர் 31 ஆம் திகதி வரையான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை என்பன 2019 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நோர்வூட் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணி மற்றும் கட்டடங்கள் 24 மற்றும் டேலர் என்பனவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) அம்பகமுவ பிரதேச சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வழங்கும் போது ரூபா 24,972,250 திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு ஆயினும், அதற்கு சமனான தொகை வழங்கப்படா திருந்ததுடன் அத்தொகை கிடைக்க வேண்டிய நிலுவையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவையாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் முடிவு செய்து திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 திசெம்பர் 28 ஆம் திகதி புதிய உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதன் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு ஒதுக்கியிருந்த நிதி ஏற்பாடுகளுக்காக ரூபா 3,412,780 பெறுமதியான சிட்டை அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தாலும் நிதி ஏற்பாடு அல்லது பொருள் 2019 ஏப்பிரல் வரை சபைக்குக் கிடைக்காதிருந்ததுடன் அது தொகை மற்றும் கடன் பட்டோர் கணக்குகளில் குறிக்கப்பட்டிருந்தது. | நிதி பெறப்பட்டு பொருள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரம். | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு / புதுப்பித்து வியாபாரங்களை மேற்கொள்ள வேண்டிய 65 வியாபாரங்களுக்காக புதிய அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குறித்த வியாபாரங்களுக் காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். | தற்போது அனுமதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாகம்) | | | |
| | 179 | தலைவரின் பயன்பாட்டிற்காக பெற்றுக்கொண்ட வாகனங்களுக்காக ரூபா 901,361 கொடுப்பனவு செய்திருந்த போதும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | 218 | காணி மற்றும் கட்டிடம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டடம் என்பன தொடர்பாக வருடாந்த மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/ 22 ஆம் இலக்க சுற்றரிக்கை | வீத வரி அறவிடுவதற்காக காணி மதிப்பீடு 2010 ஆம் ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. | சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,981,663 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

2018 ஏப்பிரல் 01 இல் நிறுவப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | 2018 | | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,288,500 | 1,634,599 | 1,642,112 | 1,021,319 |
| வாடகை | 1,712,180 | 5,517,280 | 5,858,196 | 2,447,368 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,530,000 | 660,500 | 660,500 | - |
| ஏனைய வருமானம் | 4,590,000 | - | 135,382 | - |
| மொத்தம் | 11,120,680 | 7,812,379 | 8,296,190 | 3,468,687 |

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,661,000ஆன கைப்பணம் (Key Money) அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பணம் அறவிடப்பட்டு வருகின்றது. |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 549,762 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 500,000 நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணம் சபை நிதியத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். | உரிய அட்டவணை கொண்டு வரப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற

சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 03 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் எவ்வித விடயங்கள் தொடர்பாகவும் உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை வர்த்தமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக உப விதி வர்த்தமானயில் வெளியிடப்பட்டிருந்தன. எஞ்சிய 02 உபவிதிகளை வர்த்தமானியில் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய செயலாற்ற வேண்டும் | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் |

**(இ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ)அம்பகமுவ பிரதேச சபையினால் ரூபா 9,045,317 செலவில் அரைப்பங்கு பூர்தட்தி செய்யப்பட்டிருந்த நோர்வூட் தகணமண்டபம் சபைக்கு கைளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித செயற்பாடுகளும் நிறைவேற்றப்படாமையால் விளைவற்றுக் காணப்பட்டது. | விரைவல் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்க எடுக்கப்பட வேண்டும். | தகண மண்டப நிர்மாண கோவையை அம்பகமுவ பிரதேச சபையிலிருந்த பெற்று எதிர்வரும் நடவடிக்கைக் எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ii) ரூபா 95,000 அெபறுமதியான 02 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட செயற்பாடுகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ளமையால் இந்த 02 செயற்திட்டங்களை டிசெயற்படுத்த முடியவில்லை. |

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அதிகாரப் பிரதேசத்தில் முறையான கழிவுப்பொருள் முறைமையொன்று இடம்பெறவில்லை. பொகவந்தலாவ நகரில் கழிவுப்பொருடள் அகற்றும் காணியில் கலவை கழிவு எரிக்கப்படுவது மற்றம் நோர்வுட் நகரிலும் கலவை கழிவு எரிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. | முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவம் இடம்பெற வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும் |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திராமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் பற்றாக்குறை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2018 பெப்ரவரி 26 மற்றும் மே 17 ஆகிய தினங்களில் முகாமைத்துவத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 20 பதவிகளுக்குரிய 79 வெற்றிடங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டது. | பதவியணி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினரை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

### (ஆ) செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொகவந்தலாவ மற்றம் பூலியாவத்த ஆயுர்வேத வைத்திய நிலையம் 2018 மே 27 ஆந் திகதியின் பின்னர் மூடப்பட்டிருந்ததுடன் அதன்காரணமாக அதிகார பிரதேசத்தின் மக்களுக்கு ஆயுர்வேத சிகிச்சைகள் பெற்றுக்கொள்வது தடைப்பட்டிருந்தது. ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திடமிருந்து வருடாந்தம் கிடைத்திருந்த ரூபா 240,000 பெறுமதியான மருந்துகள் இருப்பு சபையினால் தற்போது பயன்பாட்டிற்கு எடுக்காமல் சாரதி இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தன | மருத்து உத்தியோகத்தரின் சேவை பெறப்பட்டு வைத்திய நிலையம் நடாததிச்செல்லப்பட வேண்டும். | தற்போது வைத்தியர இல்லாமையால் உள்ளுராட்சிமன்ற ஆணையாளர் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அம்பகமுவ பிரதேச சபையினால் பொறுப்பளிக்கப்பட்டிருந்த 28 காணித் துண்டுகளில் 26 உரிய உறுதிபத்திரங்கள், 24 இற்குரிய திட்ட படங்கள் சபையிடம் காணப்படவில்லை. 20 காணிகளின் பரப்பளவு இனங்காணப்படவில்லை. | சபை காணிகளுக்கு உறுதி மற்றம் பரப்பளவு இனங்காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பூலியாவத்த அலுவலக காணிக்கு அண்மித்ததாக 40 பேர்ச் அளவில் ரவீசந்திரன் சிறுவர் பூங்கா, ஹொன்சி பூலியாவத்த கழிவுப்பொருள் நிலையம், பொகவந்தலாவ மாடுகொல்லுமிடம், பொகவந்தலாவ கழிவுப் பொருள் புதைத்தல், மயானத்திற்காக கொட்டியாகல தோட்டத்திலிரந்த கொள்வனவு செய்த காணியில் கொம்போஸ்ட் செயற்திட்டத் திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம், நோவூட் ஆட்டிறைச்சிக் கடை மற்றும் காணி மற்றும் நோவூட் சேவை அறை மற்றம் காணி பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 வாகன பாவனை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்ட திகதி கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அம்பகமுவ பிரதேச சபையினால் பொறுப்பளிக்கப்பட்டிருந்த வாகனத்தை சபையின் பெயருக்கு பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | மேற்கொள்ள வேண்டும். வாகனத்தை சபையின் பெயருக்கு பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நடைபெற்ற பொருள் மெய்மையாய்வின் போது சபையின் 04 நூலகங்களின் ரூபா 262,178 பெறுமதியான 2,056 புத்தகங்கள் பற்றாக்குறையாக இருந்தன. | பற்றாக்குறை தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் முடிவு செய்து திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.8 பெறுகைகள்

### 3.8.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 நிர்மாணங்களுக்குரிய உடன்படிக்கை தொகையின் கீழ் பெயர் பலகைகள் பொருத்துவுதற்காக ரூபா 10,000 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் உரிய பெயர் பலகை பொருத்தியிருக்கவில்லை. | உரிய பெயர் பலகை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெயர் பலகைக்கான பணத்தை அச்சங்கங்களின் நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து ஈடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | டிலரி கீழ் பகுதி நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் 14 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் நிலைத்தூண் (Stand Post) பொருத்துவதற்கு ரூபா 36,005 மதிப்பிடப்பட்டு 09 நிலைத்தூண்கள் நிர்மாணிப்பட்டதாக கொடுப்பன | உரிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | குறித்த ஒப்பந்தக்காரர் தெரியப்படுத்தியுள்ளார். அவ்வாறில்லாவிடின் சபையினால் உரிய குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு நிறுத்தி வைத்தல் பணம் சபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | விற்காக பட்டியலிடப்பட்டிருந்த போதும் 2019 சனவரி 2 ஆந் திகதி வரையிலும் உரிய நிலைத்தூண் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை | | பொறுப்பேற்கப்படும். |
| (இ) | 15 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் 1 ½ ‘ ஜீ.ஐ. குழாய்களால் நீர் குழாய்களுக்கு மேவுகை இட வெண்டிய போதிலும் உரிய மேவுகை பயன்படுத்தியிருக்க வில்லை. | உரிய நிர்மாணம் பூர்த்தி செய்யப் பட்டிருக்க வில்லை. | குறித்த ஒப்பந்தக்காரர் தெரியப்படுத்தியுள்ளார். அவ்வாறில்லாவிடின் சபையினால் உரிய குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு நிறுத்தி வைத்தல் பணம் சபைக்கு பொறுப்பேற்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு தொடர்பான விடயங்களை விளக்குவதற்கான கூற்றொன்று சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | உரிய விதிப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்விலகலை கட்டுப்படுவதற்காக நிலையான அளவில் பாதீடு தயாரிக்கப்படும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தர் பற்றாக்குறை காணப்பட்ட காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டம் ஒரு தடைவ மட்டுமே நடைபெற்றிருந்தது. | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை கூட்டங்கள் உரிய முறைப்படி நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |